# 6th to 10th Tamil மேற்கோள்கள்

| மேற்கோள்கள் | கூறியவர் (அல்லது) இடம்பெற்றுள்ள நூல் |
|---|---|
| “சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும்! என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்!” | க. சச்சிதானந்தன் |
| "உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்" | **தண்டி**<br>1. தண்டி - பல்லவர் ஆட்சிக் காலத்தில் காஞ்சியில் வாழ்ந்த புலவர்.<br>2. இவர் வடமொழியில் ‘**தண்டியலங்காரம்**’ என்னும் நூலை இயற்றினார்.<br>3. இந்த நூலைத் தழுவித் தமிழில் **தண்டியலங்காரம்** என்னும் நூல் தோன்றியது.<br>4. **தண்டியலங்காரம்** - ஆசிரியர் பெயர் தெரியவில்லை. |
| “களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்து விட்டது, உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைதான் அதற்குச் சான்று” - என்று கூறியவர்? | அறிஞர் அண்ணா |
| "இந்தியா தான் என்னுடைய மோட்சம்: இந்தியாவின் நன்மை தான் என் நன்மை" என்று கூறியவர்? | மகாகவி பாரதியார் |
| "குடிசைகள் ஒரு பக்கம், கோபுரங்கள் மறுபக்கம்" | ப. ஜீவானந்தம் |
| வண்டொடு புக்க மணவாய்த் தென்றல் - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | சிலப்பதிகாரம் |
| வாயு வழக்கம் அறிந்து செரிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண்டாம் - என்ற பாடலை பாடியவர்? | ஔவையார் |
| வளி மிகின் வலி இல்லை - என்றாவர்? | ஐயூர் முடவனார் / புறநானூறு |
| தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | சிலப்பதிகாரம் |
| பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால் வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்தும் அன்றி விளைவன யாவையே? - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | கம்பராமாயணம் |
| "விருந்தினரும் வறியவரு நெருங்கி யுண்ண மேன்மேலு முகம்மலரு மேலோர் போல" - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | கலிங்கத்து பரணி |
| "உண்டால் அம்ம, இவ்வுலகம்! இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத் தமியர் உண்டலும் இலரே……" என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | புறநானூறு |

| | |
|---|---|
| குரல் உனக்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து சிறிது புறப்பட்டடன்றோ இயள் - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | புறநானூறு |
| அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும் - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | நற்றிணை |
| நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன் இரும்புடைப் பழவாள் வைத்தனன்; இன்று இக் கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்; - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | புறநானூறு |
| "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீ ரோ" - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | குறுந்தொகை |
| காலின் ஏழடிப் பின் சென்று - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | பொருநராற்றுப்படை |
| " கடும் பகட்டு யானை. நெடுந்தேர்க் கோதை திரு மா வியல் நகர்க் கருவூர் முன்துறை" - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | அகநானூறு |
| "கறங்கு இசை விழவின் உறந்தை ..." - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | அகநானூறு |
| "ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு " என்கிறார் ? | மணவை முஸ்தபா |
| ஒரு மொழி வளம் பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும் உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்' என்கிறார். | மு.கு. ஜகந்நாதர் |
| "காசினியில் இன்று வரை அறிவின் மன்னர் கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணி பேசி மகிழ் நிலை வேண்டும்" என கூறியவர்? | குலோத்துங்கன் |
| சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் - என கூறியவர்? | மகாகவி பாரதியார் |
| எறியார் எறிதல் யாவனது? எறிந்தோர் எதிர்சென்று எறிதலும் செல்லான் - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | புறம் |
| 'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்' எனும் அறவிலை வணிகன் ஆ அய் அல்லன்" என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | புறம் |
| செல்வது பயனே ஈதல் துய்ப்பேம் எனினே தப்புந பலவே - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்? | புறம் |

| | |
|---|---|
| பிறர் நோயும் தம் நோய் போல் போற்றி,<br>அறன் அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன் | கலித்தொகை |
| சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்<br>புன்கண் அஞ்சும் பண்பின்<br>மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே - | நற்றிணை |
| "பிழையா நன்மொழி" என்று வாய்மையை<br>குறிப்பிடும் நூல் | நற்றிணை |
| “இனிமையும் நீர்மையும் தமிழென லாகும்” | பிங்கல நிகண்டு |
| யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்<br>இனிதாவது எங்கும் காணோம்” | பாரதியார் |
| மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் | இளங்கோவடிகள் |
| நீரின்று அமையாது உலகம் | திருவள்ளுவர் |
| மழை உழவுக்கு உதவுகிறது.<br>விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது.<br>நிலமும் மரமும் உயர்கள் நோயின்றி<br>வாழவேண்டும் என்னும் நோக்கில் வளர்கின்றன. -<br>என்று கூறியவர் | மாங்குடி மருதனார் |
| உணவெனப்படுவது நிலத்தொடு நீரே | புறநானூறு |
| குள்ளக் குளிரக் குடைந்து நீராடி | ஆண்டாள் |
| நீரும் நீராடலும் வாழ்வியலோடு பின்னிப்<br>பிணைக்கப்பட்டவையாக விளங்குக்கின்றன -<br>என்று கூறிய பேராசிரியர் | தொ. பரமசிவம் |
| உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே ! | புறநானூறு |
| உண்பது நாழி உடுப்பவை இரண்டே ! | புறநானூறு |
| யாதும் ஊரே யாவரும் கேளிர் ! | புறநானூறு |
| சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே !<br>நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ! | புறநானூறு |
| உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்,<br>பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே ! | புறநானூறு |
| அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாது<br>இது கேள்! - மன்னுபார்க் கெல்லாம் உண்டியும்,<br>உடையும், உறையுளும் அல்லது கண்டது இல். | மணிமேகலை |
| “மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன்,<br>பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்” | சிலப்பதிகாரம்<br>(காதை 5, அடி 102) |
| பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின் | மணிமேகலை (காதை 1, அடி 16) |
| பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை: எட்டினோடு<br>இரண்ம் அறியேனையே.. | திருவாசகம் (சதகம் 41) |

| | |
|---|---|
| பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம் | கம்பராமாயணம் (பாலகாண்டம், நகரப்படலம் 154) |
| புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவன் ஏவா வான ஊர்தி | புறநானூறு |
| அந்தரத் தார்மய னேயென ஐயுறும்<br>தந்திரத்தால் தம நூல்கரை கண்டவன்<br>வெந்திற லான், பெருந் தச்சனைக் கூவி, ஓர்<br>எந்திர வூர்திஇ யற்றுமின்" என்றான் | சீவக சிந்தாமணி |
| முடியாது பெண்ணாலே என்கிறார்<br>மாயையினை முடக்க எழுந்தவர்.. | - பெரியார் |
| விடியாது பெண்ணாலே என்கின்ற கேலியினை<br>மிதித்துத் துவைத்தவர் | - பாரதியார் |
| பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை<br>தீருமோவென இடிமுழக்கம் செய்தய்தவர். | பாரதிதாசனார் |
| பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வய்வதும்<br>பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் | பாரதியார் |
| மங்கையராய்ப் பிறப்ப தற்கே நல்ல மாதவம்<br>செய்திடல் வேண்டுமம்மா …. | - கவிமணி |
| பெண்எனில் பேதை என்ற எண்ணம்<br>இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்<br>உருப்படல் என்பன்பது சரிப்படாது | - பாவேந்தர் |
| மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.<br>கத்தியைத் தீட்டாதே உன்றன் புத்தியைத் தீட்டு.<br>வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தி ஆகும்.<br>எதையும் தாங்கும் இதயம் வேண்டும். | பேறறிஞர் அண்ணா |
| சட்டம் ஒரு இருட்டறை – அதில் வழக்கறிஞரின்<br>வாதம் ஒரு விளக்கு. | பேறறிஞர் அண்ணா |
| மக்களின் மதியைக்கெடுக்கும் ஏடுகள் நமக்குத் தேவையில்லை;<br>தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை;<br>தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பைப் பெருக்கும் நூல்கள் தேவை; | பேறறிஞர் அண்ணா |
| நல்ல வரலாறுகளைப் படித்தால்தான்<br>இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும். | பேறறிஞர் அண்ணா |
| இளைஞர்களுக்குப் பகுத்தறிவும்<br>சுயமரியாதையும் தேவை. | பேறறிஞர் அண்ணா |
| இளைஞர்கள் உரிமைப் போர்ப்படயின் ஈட்டி முனைகள். | பேறறிஞர் அண்ணா |

| | |
|---|---|
| நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்;<br>இனி நடப்பவவை நல்லவையாக இருக்கட்டும். | பேரறிஞர் அண்ணா |
| வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு<br>அடுத்த இடம் புத்தக சாலைக்குத் தரப்பட<br>வேண்டும் | - அறிஞர் அண்ணா |
| உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள்<br>புத்தகங்களே ! | - கதே |
| "இராவண காவியம், காலத்தின் விளைவு.<br>ஆராய்ச்சியின் அறிகுறி. புரட்சிப் பொறி.<br>உண்மையை உணர வைக்கும் உன்னத நூல்" | பேரறிஞர் அண்ணா |
| விடுதலையினால் உண்டாகும் மகிழ்ச்சியும்<br>சுதந்திரத்தினால் உண்டாகும் மனநிறைவும்<br>வேண்டுமா?<br>அப்படியானால் அதற்கு விலையுண்டு.<br>அவற்றுக்கான விலை துன்பமும் தியாகமும் தான். | நேதாஜி |
| “பொறிமயிர் வாரணம் …<br>கூட்டுறை வயமாப் புலியொடு குழும” | மதுரைக்காஞ்சி<br>(673 – 677 அடிகள்) |
| இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்<br>அறவிலை வணிகன் ஆய் அல்ன் | புறநானூறு |
| படுதிரை வையம் பாத்திய பண்பே | - தொல்காப்பியம் |
| கண்ணெழுத்துப் படுத்த என்னும் பல்பொதி | - சிலப்பதிகாரம் |
| எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே | - தொல்காப்பியம் |
| இமயத்துக்<br>கோடு உயர்ந்தன்ன தம் இசை நட்டுத்<br>தீது இல் யாக்கையோடு மாய்தல் தவத்தலையே. | புறநானூறு |
| இமயத் தீண்டி இன்குரல் பயிற்றிக்<br>கொண்டல் மாமழை பொழிந்த<br>நுண்பல் துளியினும் வாழிய பலவே ”. | புறநானூறு |
| நெட்டெழுத்து ஏழே ஓர் எழுத்து ஒருமொழி என்பார் | தொல்காப்பியர் |
| வேர் பாரு, தழை பாறு மிஞ்சினக்கால் பற்ப<br>செந்தூரம் பாரே என்றனர் | - சித்தர்கள் |
| கல்வி கரையில் கற்பவர் நாள் சில | - நாலடியார் |
| கத்தியை தீட்டாதே உந்தன் புத்தியை தீட்டு | - ஆலங்குடி சோமு |
| இளமையில் கல் | முதுமொழி |
| தண்டுடுக்கை தாளந்தக்கை. சார நடம்பயில்வார்<br>- | சம்பந்தர் தேவாரம் |

| | |
|---|---|
| சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய் | திருப்பாவை |
| நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப் பாணன் சூடான் பாடினி அணியாள் | புறநானூறு |
| சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி | பெரியபுராணம் |
| "மத்தளம் கொட்டவ ரிசங்கம் நின்றூத முத்துடைத் தாமநி ரைதாழ்ந்த பந்தற்கீழ்" | நாச்சியார் திருமொழி |
| கலைஉணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம் சிலைகெழு குறவர்க்கு | புறநானூறு |
| வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு | - தொல்காப்பியம் |
| போந்தை வேம்பே ஆரென வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்? | - தொல்காப்பியம் |
| நெல்லும் உப்பும் நேரே, ஊரீர் கொள்ளிரோ வெனச் சேரிதொறும் நுவலும் | அகநானூறு |
| சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது ஆதல் நின்னகத்து அடக்கிச் சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே! | ஔவையார் |
| உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம். | அகநானூறு |
| அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும் பெருங்கலி வங்கம் | பதிற்றுப்பத்து |
| நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன் மருக | புறநானூறு |
| கலம் தந்த பொற் பரிசம் கழித் தோணியான், கரை சேர்க்குந்து | புறநானூறு |
| திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி | திருஞானசம்பந்தர் |
| தண்பொருநைப் புனல் நாடு | சேக்கிழார் |
| பொதியி லாயினும் இமய மாயினும் பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய பொதுவறு | இளங்கோவடிகள் |
| நுண் துளி தூங்கும் குற்றாலம் | திருஞானசம்பந்தர் |
| இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம். துன்னுநர் சுட்டவும் சுட்டு அறிவுறுத்தவும் | பரிபாடல் |
| புனையா ஓவியம் கடுப்பப் புனைவில் | - நெடுநெல்வாடை |
| புனையா ஓவியம் புறம் போந்தன்ன | - மணிமேகலை |
| எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில் திரிபும் தத்தமில் சிறிது உளவாகும் | நன்னூல் |

| | |
|---|---|
| "கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஇய்" | - மணிமேகலை |
| “திங்கள் நாள்விழா மல்கு திருநெல் வேலியுறை செல்வர் தாமே" | திருஞானசம்பந்தர் |
| முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை | நற்றிணை |
| கொற்கையில் பெருந்துறை முத்து | அகநானூறு |
| வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும் !<br>மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும் ! | திரிகூட இராசப்பக் கவிராயர் |
| தமிழென் கிளவியும் அதனோ ரற்றே | - தொல்காப்பியம் |
| "இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இது நீ கருதினை ஆயின்” | - சிலப்பதிகாரம் / வஞ்சிக்காண்டம் |
| தமிழன் கண்டாய் | அப்பர் தேவாரம் |
| யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் | பாரதியார் |
| "என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினளாம் எங்கள் தாய்" என்று தமிழ்த்தாயின் தொன்மையை வியந்து பாராட்டியவர் | பாரதியார் |
| தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட பனையளவு காட்டும் | கபிலர் / திருவள்ளுவமாலை |
| நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின் | - தொல்காப்பியம் |
| கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி | கார்நாற்பது |
| நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு | பதிற்றுப்பத்து |
| கோட் சுறா எறிந்தென சுருங்கிய<br>நரம்பின் முடிமுதிர் பரதவர் | நற்றிணை |